ஆன்மிக சிந்தனை

விழிப்புடன் இருத்தல் என்றால் கவனமாக இருத்தல். நேர்மையுடனிருத்தல் ஒருபோதும் எதிர்பார்த்துச் சிக்கிக் கொள்ளாதிருத்தல் என்று பொருள்.

–ஸ்ரீ அன்னை

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

– சங்கீதம் 67ঃ 7.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், (மறுமையில்) ஒரு மனிதனிடம் அவனது பாவங்களெல்லாம் எடுத்துக் காட்டப்படும். பிறகு அவனுக்கு அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். நிச்சயமாக எவன் துருவித் துருவி விசாரணை செய்யப்படுவானோ அவன் அழிந்தான்.

(நூல் – அஹ்மத்)

இன்றும் நாளையும்

	சனிக்கிழமை (27–7–2024) குரோதி ஆண்டு, ஆடி–11 பிறை: தேய்பிறை	ஞாயிற்றுக்கிழமை (28–7–2024) குரோதி ஆண்டு, ஆடி–12 பிறை: தேய்பிறை
திதி	: சப்தமி நள்ளிரவு 1.25 வரை பிறகு அஷ்டமி.	: அஷ்டமி இரவு 11.11 வரை பிறகு நவமி.
நட்சத்திரம்	: ரேவதி மாலை 5.27 வரை பிறகு அசுவினி.	: அசுவினி பிற்பகல் 3.58 வரை பிறகு பரணி.
யோகம்	: மரண / சித்தயோகம்	: சித்தயோகம்
ராகுகாலம்	: காலை 9.00 – 10.30 மணி.	: மாலை 4.30 – 6.00 மணி.
எமகண்டம்	: நண்பகல் 1.30 – 3.00 மணி.	: நண்பகல் 12.00 – 1.30 மணி.
சூலம்	: கிழக்கு	: மேற்கு
நல்ல நேரம்	: காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி.	: காலை 7 – 8 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: குச்சனூர் ஸ்ரீ சனிபகவான் சிறப்பு திருமஞ்சனம். வாஸ்து நாள் (காலை 7.44 முதல் 8.20 வரை வாஸ்து செய்ய நன்று) தேவக்கோட்டை ஸ்ரீ ரெங்கநாதர் புறப்பாடு. திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவப் பெருமாள், காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள், மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி தலங்களில் திருமஞ்சனம். உப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் சிறப்பு ஸ்திர வார திருமஞ்சன அலங்கார சேவை. வைத்தீஸ்வரன் கோவில் ஸ்ரீ செல்வ முத்துக் குமார ஸ்வாமி காலை சிறப்பு அபிஷேகம்.

மேஷம் ..... மரியாதை
ரிஷபம் ..... லாபம்
மிதுனம் ..... சுபம்
கடகம் ..... கவனம்
சிம்மம் ..... சுகம்
கன்னி ..... தெளிவு
துலாம் ..... சிந்தனை
விருச்சிகம் ..... நிறைவு
தனுசு ..... தெளிவு
மகரம் ..... ஆர்வம்
கும்பம் ..... உறுதி
மீனம் ..... திடம்

இன்றைய விசேஷம்: சூரியனார் கோவில் ஸ்ரீ சூரிய நாராயணருக்கு சிறப்பு திருமஞ்சன அலங்கார சேவை. சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன், இருக்கன்குடி ஸ்ரீ மாரியம்மன் தலங்களில் திருமஞ்சன சேவை. கீழ்த் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதி எதிரில் உள்ள ஸ்ரீ அனுமாருக்கு திருமஞ்சன சேவை. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் குளக்கரை ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு திருமஞ்சன சேவை. திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதியம்மன் சிறப்பு அபிஷேகம் அலங்காரம்.

மேஷம் ..... ஆதாயம்
ரிஷபம் ..... தாமதம்
மிதுனம் ..... திடம்
கடகம் ..... வரவு
சிம்மம் ..... விவேகம்
கன்னி ..... இரக்கம்
துலாம் ..... வெற்றி
விருச்சிகம் ..... புகழ்
தனுசு ..... பயணம்
மகரம் ..... ஆசை
கும்பம் ..... ஆர்வம்
மீனம் ..... சாந்தம்

பல்லடத்தில் ரூ.2.80 கோடியில் வளர்ச்சிப் பணிகள்: தொடங்கிவைத்தார் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

பல்லடம் அருகேயுள்ள மல்லேகவுண்டம்பாளையத்தில் தார் சாலை அமைக்கும் பணியைத் தொடங்கிவைக்கிறார் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்.

பல்லடம், ஜூலை 26: பல்லடம் ஒன்றியப் பகுதிகளில் ரூ.2.80 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) குமாரராஜா தலைமை வகித்தார்.

பொங்கலூர் மற்றும் பல்லடம் ஊராட்சி ஒன்றியங்களுக்குள் பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்த பின் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது: மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளும் வேகமாகவும், தரமாகவும் நடைபெற்று வருகின்றன.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக் கடன் தள்ளுபடி, காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி பயின்று முடிக்கும் வரை மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை முதல்வர் தொடங்கிவைக்க உள்ளார் என்றார்.

தொடர்ந்து, செய்தியாளர்களிடம் கூறுகையில், 'மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணி தமிழகத்தில் வெற்றிபெற முடியவில்லை என்ற ஆத்திரத்தில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. வேண்டும் என்றே வஞ்சிக்கிறது என்றார்.

முன்னதாக, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், பல்லடம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.2.80 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளையும், முடிவுற்ற பணிகளையும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கீர்த்தி ஜி.சுப்பிரமணியம், பொங்கலூர் ஒன்றியக்குழுத் தலைவர் வழக்குரைஞர் எஸ்.குமார், பல்லடம் ஒன்றியக் குழு துணைத் தலைவர் ஈ.பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பயன்பாட்டுக்கு வந்தது வஞ்சிபாளையம் ரயில்வே சரக்கு முனையம்

திருப்பூர், ஜூலை 26: திருப்பூரை அடுத்த வஞ்சிபாளையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள (கூட் ஷெட்) ரயில்வே சரக்கு முனையம் முழுமையாகப் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

சேலம் ரயில்வே கோட்டத்தின்கீழ் திருப்பூரை அடுத்த வஞ்சிபாளையத்தில் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வந்த கூட்ஷெட் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து முழு பயன்பாட்டு வந்துள்ளது.

இது குறித்து சேலம் ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: திருப்பூர்–கோவை ரயில் நிலையங்களுக்கு இடையே திருப்பூரில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள இந்த கூட்ஷெட் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக 2 ரயில் பாதைகளின் நீளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு பாதையின் நீளம் 528 மீட்டரிலிருந்து 718 மீட்டராகவும், மற்றொரு ரயில் பாதையின் நீளம் 695 மீட்டரிலிருந்து 789 மீட்டராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் எலக்ட்ரானிக் இன்டர்லாக் வசதி செய்யப்பட்டுள்ளதால் ரயில் இயக்கங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

இந்த கூட்ஷெட்டில் இருந்து 42 வேகன்களைக் கொண்ட முழு நீள சரக்கு ரயில்களை கையாள முடியும். வெளிமாநிலங்களுக்கு சரக்குகளை அனுப்ப காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை முன்பதிவு செய்யலாம்.

திருப்பூரில் உள்ள கூட்ஷெட்டுக்கு மாற்றாக வஞ்சிபாளையத்தில் உள்ள இந்த கூட்ஷெட் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சரக்குகளை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டெர்மினல் கட்டணத்தில் ஒரு டன்னுக்கு ரூ.20 வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. திருப்பூர் கூட்ஷெட்டில் நெரிசலைக் குறைக்கும் வகையிலும், வாடிக்கையாளர்களைக் கவரும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பூரைவிட வஞ்சிபாளையம் கூட்ஷெட் நகரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருப்பதால், போக்குவரத்து நெரிசல் இல்லாமல் சரக்குகளை எளிதில் கொண்டு செல்ல முடியும். ஆகவே, திருப்பூர், பல்லடம், அவிநாசி, தெக்கலூர் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள், வர்த்தகர்கள், தொழில்முனைவோர் இந்த கூட்ஷெட்டை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றனர்.

திருப்பூரை அடுத்த வஞ்சிபாளையத்தில் பயன்பாட்டுக்கு வந்துள்ள ரயில்வே சரக்கு முனையம்.

வெள்ளக்கோவிலில் நகராட்சி நிர்வாக அதிகாரிகள் ஆய்வு

வெள்ளக்கோவில், ஜூலை 26: வெள்ளக்கோவிலில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக கூடுதல் இயக்குநர் விஜயகுமார் தலைமையிலான அதிகாரிகள் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தனர்.

சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கு, சீரங்கராயகவுண்டன் வலசு சாலையில் உள்ள திடக்கழிவு மேலாண்மை அலகு, கே.பி.சி. நகரில் குடிநீர் விநியோகம், 5 புதிய தார் சாலைப் பணிகள், உப்புப்பாளையம் சாலையில் நடைபெற்று வரும் நகராட்சி அலுவலக புதிய கட்டுமானப் பணிகள், முத்தூர் சாலை புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்று வரும் வாரச் சந்தை மேம்பாட்டுப் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்ததுடன், அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

ஆய்வின்போது, வெள்ளக்கோவில் நகராட்சி ஆணையர் எஸ். வெங்கடேஷ்வரன், நகராட்சி பொறியாளர் எம்.திலீபன், சுகாதார ஆய்வாளர் செல்வராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பூட்டிய வீட்டில் தீ: உடைமைகள் எரிந்து நாசம்

காங்கயம், ஜூலை 26: காங்கயம் அருகே பூட்டிய வீட்டில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் வீட்டு உபயோகப் பொருள்கள், உடைமைகள் எரிந்து நாசமாயின.

காங்கயம் நகராட்சி 1– ஆவது வார்டுக்குள்பட்ட திருவிக நகர் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருபவர் பிரகாஷ் (38).

இவர் வெள்ளிக்கிழமை காலை தனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, வீட்டை பூட்டி விட்டு மனைவியுடன் வேலைக்குச் சென்றுள்ளார். பின்னர், பிற்பகல் 12 மணியளவில் பூட்டிய வீட்டில் இருந்து புகை வந்துள்ளது. இதைப்பார்த்த அக்கம்பக்கத்தினர் பிரகாஷுக்கும், காங்கயம் தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தீயணைப்பு வீரர்கள் சுமார் 1 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் வீட்டு உபயோகப் பொருள்கள், உடைமைகள் எரிந்து நாசமாயின.

தீ விபத்துக்கான காரணம் குறித்து காங்கயம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தீரன் சின்னமலை மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

திருப்பூர், ஜூலை 26: திருப்பூரை அடுத்த வஞ்சிபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'யூபோரியா 2024' எனும் அறிவியல் சார் வன்பொருள் செயல் விளக்க கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்குக்கு கல்லூரி முதல்வர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை வகித்தார். தகவல் தொழில்நுட்பத் துறை தலைவர் பேராசிரியை ஆர்த்தி வரவேற்புரையாற்றினார்.

சன் இன்போ சிஸ்டம் நிறுவனர் கண்ணன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசுகையில், 'தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான சார் வன்பொருள் தளத்தின் முக்கியத்துவத்தையும், செயல்பாட்டையும் எடுத்துரைத்தார்.

இதையடுத்து, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான தீர்வுகள் மூலம் வன்பொருள் காட்சிப்படுத்தப்பட்டது.

இதில், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் விதமாக புதுமை படைப்பாற்றல் மற்றும் அறிவு பகிர்வுக்கான வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கணினி அறிவியல் துறைத் தலைவர் சத்யா நன்றி உரையாற்றினார்.

கிணற்றில் தவறி விழுந்த விவசாயி உயிரிழப்பு

பல்லடம், ஜூலை 26: பல்லடம் அருகே கிணற்றில் தவறி விழுந்த விவசாயி உயிரிழந்தார்.

பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் ஒன்றியம் முத்தூரைச் சேர்ந்தவர் வரதராஜ் (45). விவசாயியான இவர், தனது தோட்டத்தில் விவசாயப் பணியில் வியாழக்கிழமை ஈடுபட்டிருந்துள்ளார். அப்போது, அங்கிருந்த கிணற்றில் எதிர்பாராதவிதமாக விழுந்துள்ளார்.

இதனைப் பார்த்த அங்கிருந்தவர்கள், கிணற்றில் இறங்கி வரதராஜை மீட்டு கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து காமநாயக்கன்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வீட்டின் பூட்டை உடைத்து 11 பவுன் திருடிய இருவர் கைது

காங்கயம், ஜூலை 26: காங்கயம் அருகே வீட்டின் பூட்டை உடைத்து 11 பவுன் நகையைத் திருடிய வழக்கில் தொடர்புடைய இருவரை போலீஸார் கைது செய்தனர்.

காங்கயம் அருகேயுள்ள வீரணம்பாளையம் ஊராட்சி அர்த்தநாரிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் தங்கவேலு (48). இருசக்கர வாகன ஓர்க்ஷாப் நடத்தி வருகிறார். இவரது மனைவி வீரணம்பாளையம் பள்ளியில் ஒப்பந்த ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், தங்கவேலு வழக்கம்போல மனைவி மற்றும் மகள்களை பள்ளியில் விட்டுவிட்டு கடந்த நவம்பர் 3 –ஆம் தேதி காலை வேலைக்குச் சென்றுள்ளார். பின்னர், மாலை 5 மணியளவில் வீடு திரும்பியுள்ளார்.

அப்போது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்துள்ளது. அதிர்ச்சியடைந்த அவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, பீரோவில் இருந்த 11 பவுன் நகைகள் திருடுபோனது தெரியவந்தது.

இது குறித்து காங்கயம் காவல் நிலையத்தில் தங்கவேலு புகார் அளித்தார். வழக்குப் பதிவு செய்த போலீஸார், மர்ம நபர்களைத் தேடி வந்தனர்.

இந்நிலையில், தங்கவேலின் வீட்டில் திருட்டில் ஈடுபட்டவர்கள் திருப்பூர் பகுதியில் பதுங்கி இருப்பதாக போலீஸாருக்கு தகவல் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற போலீஸார், அங்கிருந்த திருப்பூர், வீரபாண்டி பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் (28), கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர் பகுதியைச் சேர்ந்த ஸ்டீபன் (38) ஆகியோரை வியாழக்கிழமை மாலை கைது செய்து காங்கயம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

குற்ற வழக்கில் தலைமறைவாக இருந்தவர் கைது

காங்கயம், ஜூலை 26: குற்ற வழக்கில் தலைமறைவாக இருந்த நபரை காங்கயம் போலீஸார் கைது செய்தனர்.

காங்கயம் பங்களாபுதூர் பகுதியைச் சேர்ந்தவர் அண்ணாமலை. இவர் அடிதடி வழக்கில் கடந்த 2019 –ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். பின்னர், ஜாமீனில் வெளியே வந்தவர், நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.

அவரை போலீஸார் தேடி வந்த நிலையில், காங்கயம் அருகே பதுங்கி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற போலீஸார், அண்ணாமலையை கைது செய்து நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தினர்.

கஞ்சா வைத்திருந்த இளைஞர் கைது

வெள்ளக்கோவில், ஜூலை 26: வெள்ளக்கோவிலில் கஞ்சா வைத்திருந்த இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

வெள்ளக்கோவில் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமுத்து உப்புப்பாளையம் பகுதியில் ரோந்து பணியில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டிருந்துள்ளார். அப்போது, அங்குள்ள மயானம் அருகே சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த இளைஞரைப் பிடித்து விசாரித்துள்ளார்.

அப்போது, அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளார். இதையடுத்து, அவரை சோதனை செய்தபோது 50 கிராம் கஞ்சா வைத்திருந்தது தெரியவந்தது. விசாரணையில், அவர் வெள்ளக்கோவில் அகலரைப்பாளையம்புதூரைச் சேர்ந்த பரமேஸ்வரன் (26) என்பது தெரியவந்தது. இதையடுத்து, பரமேஸ்வரனை கைது செய்த போலீஸார், அவரிடமிருந்த கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

காங்கயத்தில் இன்று 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்

திருப்பூர், ஜூலை 26: காங்கயம் ஊராட்சி ஒன்றியத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் சனிக்கிழமை (ஜூலை 27) நடைபெறவுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் பட்ட கிராங்களில் ஜூலை 16–ஆம் தேதி முதல் செப்டம்பர் 13 –ஆம் தேதி வரை 76 இடங்களில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் நடைபெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக காங்கயம் ஊராட்சி ஒன்றியத்துக்குள் பட்ட பொத்தியபாளையம், வீரணம்பாளையம், பாப்பினி ஊராட்சிகளுக்கு பொத்தியபாளையம் பழனியப்பா மஹாலில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

இந்த முகாமில், பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறவுள்ளனர்.

எனவே, மேற்கண்ட ஊராட்சிக்குள்பட்ட பொதுமக்கள் இந்த முகாமைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிரிழப்பு, பயிர் சேதங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கான மாதாந்திர குறைதீர் கூட்டத்தில் பேசுகிறார் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் உள்ளிட்டோர்.

திருப்பூர், ஜூலை 26: வன விலங்குகளால் ஏற்படும் உயிர், பயிர் சேதத்துக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமை வகித்தார். இதில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருப்பூர் மாவட்டக்குழு அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது: தமிழகத்தில் கோவை திருப்பூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் வன எல்லையை ஒட்டிய பகுதிகளில் பட்டா மற்றும் அரசின் புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

இந்த நிலங்களில் காட்டுப் பன்றி, மயில், யானை, குரங்கு போன்றவற்றால் தொடர்ந்து பயிர் சேதம் ஏற்பட்டு வருகிறது. ஒரு சில பகுதிகளில் மனித உயிர் சேதமும், பொருள்கள், வீடு உடைமைகளும் சேதமடைந்து வருகின்றன. வன விலங்கு பாதுகாப்பு திருத்தச் சட்டம் மக்களவையில் 2023 ஏப்ரலில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது வன எல்லைகள் குறித்தோ அல்லது வன உயிரின சரணாலயங்கள் குறித்தோ மாநில சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிக் கொள்ளவும் வழிவகை செய்கிறது.

அதேபோல, பயிர் நஷ்டம், உயிர் சேதம் இதுபோன்ற வன விலங்குகளால் ஏற்படும் இழப்புக்கு மாநில அரசு உரிய இழப்பீட்டை தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதை கேரளம் போன்ற மாநில அரசுகள் நடைமுறைப் படுத்தி வருகின்றன. தமிழகத்தில் வன எல்லைகளை ஒட்டிய வேளாண் பணிகளில் ஈடுபடும் விவசாயிகளில் நெல், வாழை, தென்னை, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு தமிழக அரசு தற்போது வழங்கும் இழப்பீடு போதுமானதல்ல. உரம், மருந்து இதர செலவினங்கள் குறித்து ஆய்வு செய்து முழு செலவையும் ஈடு செய்யும் வகையில் இழப்பீடு தர வேண்டும். இதற்காக வேளாண்மைத் துறையுடன் இணைந்து வருவாய்த் துறையும் செயல்படும் வகையில் மாநில அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். மேலும், வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிரிழப்புக்கு ரூ.25 லட்சம், சேதாரமாகும் பயிர்களுக்கு முழு இழப்பீடும் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கக் கோரிக்கைஃ தமிழக கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது: தாராபுரம் வட்டம், குண்டடம் ஒன்றியம் வடுகபாளையம் கிராமத்தில் 8 விவசாயிகள் ஒருங்கிணைந்து ஆழ்துளைக் கிணறு அமைத்து சொட்டுநீர் பாசனத்தில் முருங்கை சாகுபடி செய்து வருகின்றனர். இந்நிலையில், ஆழ்துளைக் கிணற்றில் தண்ணீர் குறைந்துவிட்டது. இதனால், முருங்கை செடிகள் காயும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வேளாண் துறை அதிகாரிகள் மூலம் அதே பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு மனுவில், தாராபுரம் வட்டத்தில் உள்ள உப்பாறு அணைக்கு பிஏபி பாசனத்தில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமிஷன் மண்டிகளில் நடக்கும் முறைகேடுகளைக் களைய வேண்டும்ஃ தமிழ்நாடு பட்டுக்கூடு உற்பத்தி விவசாயிகள் நலச்சங்கம் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது: தமிழகம் முழுவதும் காய்கறி மார்க்கெட்டில் கமிஷன் என்ற பெயரில் நடக்கும் முறைகேடுகள் மற்ற மாநிலங்களைவிட மிகவும் மோசமாக உள்ளது. மேலும், கமிஷன் மண்டிகளில் எதிர்கமிஷன் என்ற முறையும் வைத்துள்ளனர்.

காய்கறிகள் வாங்கும் வியாபாரிகளுக்கு 3 சதவீதம் முதல் 3.5 சதவீதம் வரையில் கமிஷன் கொடுக்கின்றனர். வாங்கிய காய்கறிகளுக்கு 1 முதல் 2 மாத காலம் தாழ்த்தி பணம் கொடுக்கும் வியாபாரிகளுக்கு கமிஷன் கொடுக்கும் முறையும் உள்ளது. ஆகவே, கமிஷன் மண்டிகளில் நடக்கும் முறைகேடுகளைக் களைய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் பேசியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் இயல்பான ஆண்டு மழை 618.20 மி.மீ அளவு. இதில், 2024 ஜூலை மாதம் முடிய சராசரியாக பெய்ய வேண்டிய மழை அளவு 198.20 மி.மீ. இதில், நடப்பாண்டு தற்போது வரையில் 260.23 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரியாக பெய்ய வேண்டிய மழையின் அளவை விட 62.03மி.மீட்டர் அதிகமாகும். பயிர் சாகுபடிக்குத் தேவையான நெல், பிற பயறு வகை தானியங்கள், விதைகள் போதிய அளவு இருப்பில் உள்ளன.

நெல் 50.12 மெட்ரிக் டன், சிறுதானிய பயறுகள் 14.23 மெட்ரிக் டன், பயறு வகைகள் 35.01 மெட்ரிக் டன் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகள் 27.33 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளன. நெல் சாகுபடிக்குத் தேவையான யூரியா, பாஸ்பேட், காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளன என்றார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) கிருஷ்ணவேணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சினீவாசன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.